# காமன் கூத்தும் மலையகப் பண்பாடும்

**லோகேஸ்வரி.பா[1], கோவிந்தனி.சு[2], சமீதா.பா[3]**

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது 'காமன் கூத்தும் மலையகப் பண்பாடும்' என்ற தலைப்பில் நிகழ்த்தப் பட்டுள்ளது. கூத்துக்கள் மனித வாழ்வில் இரண்டறக் கலந்த விடயமாகக் காணப்படுகின்றன. மனிதன் தன்னிலை மறந்து முற்றுமுழுதாகக் கூத்துக்களில் ஈடுபட்டு வருகின்றான். இலங்கையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு பலதரப்பட்ட கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமே. அந்தவகையில் மலையகப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டோமானால், பிரித்தானியர்கள் ஆட்சியில் காணப்பட்ட அடக்கு முறைகளும் நிகழ்ந்தேறிய கொடுமைகளும் கொத்தடிமைகளாக வந்த மக்களை மீள முடியாத துன்பகரமான வாழ்க்கைக்குத் தள்ளியது. இவ்வாறான சூழ்நிலையிலும் மலையக மக்கள் தமது பாரம்பரியக் கலைகளை ஒருபோதும் கைவிடவில்லை. தமக்கு ஆறுதல் அளிக்கும் அடையாளங்களாக அன்றுதொட்டு இன்றுவரையில் இவற்றைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். கலை, கலாசாரம், பண்பாடு என்ற அடிப்படை அம்சங்களை நினைவில் கொண்டு, முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. மீரா.எஸ்.ஹரிஸ் என்பவரின் "இலங்கையின் இந்திய வம்சாவழி மக்களின் பாரம்பரிய கூத்துக்கள் என்ற நூலை முதன்மை நூலாகக் கொண்டதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. காமன் கூத்தானது மலையகத்தின் பல பிரதேசங்களில் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் பக்தி பூர்வமாகவும் நம்பிக்கையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட இக்கூத்தினை இன்றைய சந்ததியினர் பெருமளவில் விரும்புவதில்லை. அதனை நிவர்த்தி செய்து எமது இளைய சமுதாயத்தினரிடம் இக்கூத்தினைக் கையளிப்புச் செய்வதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** மலையகம், கூத்து, பக்தி, அடக்குமுறை, பொட்டல் வெளி

1. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் bklogeshwary2000@gmail.com
2. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் govindanisub2000@gmail.com
3. ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் sabisameetho@gmail.com